Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 29 2025

செவ்வாய்க்கிழமை 29, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 207 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# 24 மணிநேர சேவை நிறைவு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின், 24 மணி நேரமும் முன்னெடுக்கப்பட்டிருந்த கடவுச்சீட்டு வழங்கும் சேவை, அடுத்த மாதம் முதல் இயல்பு நிலைக்குத் திரும்புவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின், செயற்பாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதால், தேங்கிக்கிடந்த கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணி நேரக் கடவுச்சீட்டு வழங்கும் சேவை நிறுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## "அரசாங்கத்தின் இறுதி துருப்புச் சீட்டு"

திசைகாட்டி அதிகாரத்தைப் பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே நிதி வழங்குவோம் என அரசாங்கத்தின் கடைசி துருப்புச் சீட்டை வெளிப்படுத்தியுள்ளனர். உள்ளூர் அதிகார சபை சட்ட மூலங்களைக் கூட புரிந்து கொள்ளாத ஒருவரே நாட்டின் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். தற்போது ஜே.வி.பிக்கு மாத்திரம் தலைவராக இருந்து கொண்டு பக்கச்சார்பான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

# "மாகாண நிதியை வங்கியில் இருந்து எடுப்பது குற்றமல்ல"



இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திங்கட்கிழமை (28) அன்று கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் வாக்குமூலம் அளித்தார்.

ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க, கடந்த 2016ஆம் ஆண்டில் கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை நிதி கணக்கில் இருந்து 10 இலட்சம் ரூபாவை வங்கியில் இருந்து காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றித் தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ரணில் விக்ரமசிங்க, சாமர சம்பத் தசநாயக்கவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை கடந்த 10ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## முன்னாள் அமைச்சர்கள் "மூவருக்கு சிக்கல்"



பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மூன்று முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பேருவளையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி , உத்தியோகபூர்வ இறக்குமதி தடையின் போது, இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியதில் இந்த நபர்கள் ஈடுபட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகக் கூறினார்.

முறையான பதிவு இல்லாமல் வாகனங்களைப் பயன்படுத்தியதற்காக மூன்று முன்னாள் அமைச்சர்களும் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்று அவர் கூறினார்.



## "ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை"

சுமார் 75 ஆண்டுகளாக ஊழலுக்கும் குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை நாங்கள் அகற்றியுள்ளோம். அந்த மக்கள் விரோத ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து பிள்ளைகளுக்கும் எனது வாழ்த்துக்கள். சித்தியடையாத பிள்ளைகளுக்காக எமது அரசாங்கத்திடம் வேலைத்திட்டமொன்று உள்ளது என்றும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2




## உ/த மீளாய்வுக்கு 16 வரை காலக்கெடு

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்தது.

பரீட்சார்த்திகள் ONLINE EXAMS.GOV.LK எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பெற்பேற்றை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

தொடர்ச்சி P2

## தற்கொலை குண்டுத் தாக்குதல்: மைத்திரிபால சாட்சியாக ஆஜர்



கொழும்பு பொரலஸ்கமுவ பிரதேசத்தில் 2008ஆம் ஆண்டில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கின் முதலாவது சாட்சியாளராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு மேல் நீதிமன்றில் திங்கட்கிழமை (28) ஆஜராகி சாட்சியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## "அலிபாபாவின் கையில் தமிழரசு"

தமிழினம் பாரிய ஆயுதப் போராட்டத்தின் பின்னர் யாரும் பொறுப்பெடுக்க முடியாத நிலையில், விடப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி தான் ஏனைய கட்சிகளை உள்வாங்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டிய ஒரு கட்சி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அக்கட்சி இக்கட்டில் சிக்கியுள்ளது.

தொடர்ச்சி P2



## "எனது படத்தை பயன்படுத்த வேண்டாம்"

2025 உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்திற்கு மக்கள் கூட்டணி தனது படத்தையும் பெயரையும் சட்டவிரோதமாக பயன்படுத்துவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

## பத்துநாள் 'ஸ்ரீ தலதா வழிபாடு' நிறை: கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணி ஆரம்பம்

பத்துநாள் "ஸ்ரீ தலதா வழிபாடு" நிறைவில் கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணியை கிளீன் ஸ்ரீலங்கா செயலகம் மற்றும் கடற்படை என்பன இணைந்து முன்னெடுத்துள்ளன.

கண்டி குளத்தில் போடப்பட்டிருந்த பிலாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் உள்ளிட்ட கழிவுகளை சுத்தப்படுத்தி கண்டி குளம் வழமை நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

தொடர்ச்சி P2



## ரணவீரவின் ரிட் மனு தள்ளுபடி

களனியில் அரசாங்க நிலத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்ததாகக் கூறப்படும் வழக்கில் தன்னை கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தாக்கல் செய்த ரிட் மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் திங்கட்கிழமை 28 தள்ளுபடி செய்துள்ளது.

தொடர்ச்சி P2

## இ.போ.சபைக்கு 10 முடிவுகள்

இலங்கை போக்குவரத்து சபை (SLTB) மற்றும் ஒன்பது மாகாணங்களின் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளின் தலைவர்களுடன் சிறப்பு கலந்துரையாடலை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க சமீபத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC), நடத்தினார்.



NTC, SLTB மற்றும் மாகாண அமைப்புகளின் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, இலங்கையின் பயணிகள் போக்குவரத்து அமைப்பை மேம்படுத்தவும் நவீனமயமாக்கவும் பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பின்வருமாறு:

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "அரசாங்கத்தின்...

உடுநுவர, கெலிஓயா பிரதேசத்தில் திங்கட்கிழமை (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல பொய்யான வாக்குறுதிகளுக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் இரண்டிலும் வெற்றி பெற்ற ஜே.வி.பி தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பொய் மற்றும் ஏமாற்று மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றார்.

வளமான நாடு அழகான வாழ்க்கையை அமைத்துத் தருவோம் என வாக்குறுதி அளித்தனர். வழங்கிய வாக்குறுதிகளை மீறும் நடவடிக்கையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. தொடர் ஏமாற்றமே இன்று மக்களிடம் எஞ்சியுள்ளது என்றார்.

தமது முதலாவது வரவு- செலவுத் திட்டத்திலே 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என கூறப்பட்ட போதிலும், அந்த வாக்குறுதியும் மீறப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்த கையோடு அரிசி, பால் மா, தேங்காய் போன்றவற்றின் விலைகளைக் குறைப்போம் என தெரிவித்தனர். ஆனால் இன்று பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துக் காணப்படுகின்றன. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைக் கூட வழங்க முடியாத ஆட்சியொன்றே இன்று உதயமாகியுள்ளது. ரூ. 9,000 மின்சாரக் கட்டணத்தை ரூ. 6,000 ஆக மாற்றி 33 சதவீதத்தால் குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஊழல், மோசடி, களவுகளை ஒழிப்போம் என பிரஸ்தாபித்தனர். எரிபொருள் விலையைக் குறைப்போம் என்றனர். பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான VAT வரியை நீக்குவோம் என்றனர். இதுவரை நடந்தது ஒன்றும் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## எந்த பாதுகாப்பும்...

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ, ஹுங்கம மற்றும் தங்காலை பகுதிகளில் திங்கட்கிழமை (27) நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, 75 ஆண்டுகளாக ஊழலுக்கும் குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை நாங்கள் அகற்றியுள்ளோம். அந்த மக்கள் விரோத ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை. இதனால் பயந்து குழப்பமடைந்தவர்கள் அரச சேவையிலும் உள்ளனர். பாதுகாப்புத் தரப்பிலும் உள்ளனர். இவற்றையெல்லாம் அரசியல் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொண்டு வந்தனர். இப்போது அரசியல் ஆசீர்வாதம் இல்லாமல் போய்விட்டதால், எஞ்சிய முடிச்சுகளை அவிழ்க்க இது உள்நோக்கித் திருப்பப்பட்டுள்ளது. இப்போது அதனைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள்.

அதன் இரண்டு மிகவும் பிரபலமான சம்பவங்களில் ஒன்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கைது செய்யப்பட்டதாகும். பின்னர் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டமை. இதற்கு முன்பு பொலிஸ் மா அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதற்காக பாராளுமன்றம் மூன்று பேர் கொண்ட குழுவையும் நியமித்துள்ளது. இன்று, அந்தக் கும்பலால் பாதுகாக்கப்பட்டவர்கள் கூட பயப்படுகிறார்கள். முன்னைய ஆளும் கட்சியில் அமைச்சரவை பதவிகளை வகித்த பிள்ளையான் போன்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார். அங்கேயும் சில வேடிக்கையான விடயங்களைப் பார்த்தேன். மொட்டுக் கட்சியினரின் கூற்றுப்படி, பிள்ளையான் தான் போரை வென்றுள்ளார். ஆனால் பல்கலைக்கழக உபவேந்தர் ஒருவர் காணாமல் போனது தொடர்பாக பிள்ளையான் கைது செய்யப்பட்டார் என்றார்.

## ரணவீரவின்...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதியரசர் எம்.டி. முகமது லாஃபர் மற்றும் நீதியரசர் கே.பி. பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய இரண்டு நீதியரசர்கள் கொண்ட அமர்வு, உண்மைகளைப் பரிசீலித்த பிறகு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

களனி பகுதியில் அரசாங்க நிலத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்த சம்பவம் தொடர்பாகத் தன்னை கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரி ரணவீர இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக மஹர நீதவான் நீதிமன்றம் ஏற்கெனவே பிரசன்ன ரணவீர உட்பட மூன்று சந்தேக நபர்களுக்கு பயணத் தடை விதித்துள்ளது

## "மாகாண நிதியை வங்கியில் இருந்து எடுப்பது குற்றமல்ல"

இது தொடர்பான விசாரணைகளுக்காக திங்கட்கிழமை (28) காலை 09.30 மணியளவில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னரே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், தமிழ்-சிங்கள புத்தாண்டு விடுமுறை காலம் என்பதால், தன்னுடைய சட்டத்தரணி வெளிநாட்டில் இருக்கின்றார். என்றும், அவர் நாடு திரும்பியதும், ஆணைக்குழுவில் ஆஜராகுவதாக ரணில் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இது தொடர்பான விசாரணைகளுக்காக ரணில் விக்ரமசிங்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் திங்கட்கிழமை (28) காலை 09.15 மணியளவில் முன்னிலையாகியிருந்த நிலையில், விசாரணைகளின் பின்னர் மதியம் 12.25 மணியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் விசாரணைகளை அடுத்து வெளியில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க, "நான் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஒரு வாக்குமூலம் அளித்து எனது கருத்தை விளக்கினேன், இதன் மூலம் வங்கிக் கணக்கில் நிதியை வைத்திருப்பது உண்மையான குற்றம் என்று நான் கூறினேன்," என்று விக்ரமசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணி, ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில், சுமார் 10 பக்க விளக்கத்தை ரணில் அளித்தார். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அழைத்தால், ஆஜராகவேண்டும். ஆஜராகவிட்டால்தான் அது குற்றமாகும்" என்றார்.

## "எனது படத்தை பயன்படுத்த வேண்டாம்"

அத்தனகல்ல பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கதிரை சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுண கட்சி வேட்பாளர்கள் சிலர் தமது புகைப்படத்துடன் லசந்த அழகியவண்ண மற்றும் சரண குணவர்தனவின் புகைப்படங்களை இணைத்து கையேடுகளை பகிர்வதாகவும் இதற்கு எந்தவொரு அனுமதியையும் தான் வழங்கவில்லையெனவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கதிரை சின்னத்தில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் தனது புகைப்படத்தை பயன்படுத்த வேண்டாமென ஏற்கெனவே கூறியுள்ளதாகவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

## "அலிபாபாவின் கையில் தமிழரசு"

தமிழரசுக் கட்சி அலிபாபாவின் கையில் சிக்கியுள்ளது என தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியின் பொதுக்குழு, வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டமையால் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கட்சியானது அலிபாபாவின் கையிலும், அவருடன் சேர்ந்த 19 திருடர்களின் கையிலும் மாட்டிக் கொண்டுள்ளது. இந்த அலிபாபாவும் 19 திருடர்களும் மனம் மாற வேண்டும். தமிழரசுக் கட்சியின் பொதுப்பில் இருக்கும் அலிபாபாக்கள் அதிலிருந்து விலக வேண்டும். அப்படி இருந்தால் தான் அடுத்த கட்ட நகர்வைப் பற்றிய சிந்தனையில் நாம் செல்லக் கூடியதாக இருக்கும்.

வழக்கு போட்டது யார்? என்பது இருக்க அதை எய்தவன் யார் என பார்க்க வேண்டும். அம்பையும் தெரியும். எய்த சுற்றுமாத்து யார் என்பதைத் தேர்தலுக்கு முன் மக்கள் அடையாளம் காண வேண்டும். தமிழரசுக் கட்சி தான் வெல்ல வேண்டும் என்பது உண்மை. ஆனால், அவர்கள் வென்று எதையும் சாதிக்கப் போவதில்லை. இன்றைய நிலைமையில் தமிழரசுக் கட்சி பெற்றுக் கொள்ளும் தற்காலிக வெற்றி அதனை நிரந்த அழிவில் கொண்டு சென்று நிறுத்தும். இது தான் உண்மை நிலைப்பாடு.

தமிழரசுக் கட்சியில் புதிய சூழ்ச்சிகள் இன்று ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. அவை அரங்கேறக் காத்திருக்கின்றது. எமது கட்சியில் பொதுக் குழுவில் 326 உறுப்பினர்கள். 57 பிரதேச சபை அல்லது பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட எமது தொகுதிக் குழுக்களில் இருந்து 285 பேரும் மத்தியக் குழுவில் 46 பேரும் என 326 பேர் உள்ளனர். அண்மையில் சிறீதரன் கூட ஒரு அறிவிப்பை விட்டிருந்தார். அண்மையில் சிறீதரன் அவர்கள் இந்த 36 பேருடன் மீண்டும் ஒரு தெரிவை செய்து உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டும் என்றார்.

ஆனால், இப்போது இருக்கும் சுற்றுமாத்தில் 161 பேர் தான் பொதுக் குழுவில் இருக்கலாம் என கூறுகிறார்கள். அப்படியெனில், 165 பேர் பொதுக் குழுவில் இருந்து வெளியேற்றப்படப் போகிறார்கள். இதைக் கூட தமிழரசுக் கட்சியில் இருக்கும் ஒவ்வொருவரும் தெரியாமல் கண் மூடி மௌனியாக இருக்கிறார்கள். அவர்களுக்கே தெரியாது தாங்கள் வெளியேற்றப்பட்ட போகின்றார்கள் என்று. முல்லைத்தீவில் 25 பேர் பொதுக் குழுவில் இருக்கிறார்கள். வவுனியாவில் 20 பேர் வரையில் இருக்கிறார்கள். 70 பேருக்கு மேல் பொதுக் குழுவில் வன்னிப் பிரதேசத்தில் இருக்கிறார்கள். இவர்களில் தற்போதைய நிலைவரப்படி வவுனியா, மன்னார், முல்லைத்தீவு என்பவற்றுக்கு 5 பேர் வீதம் 15 பேர் தான் வரலாம் என்கிறார்கள். தங்களது சுயநலத்திற்காக இதை உருவாக்கியுள்ளார்கள். இது பற்றி கேள்வி கேட்க யாருக்காவது தகுதி இருக்கின்றதா?

இன்றைக்கு சஜித் பிரேமதாச அவர்களை ஆதரித்தவர்கள் தேசியவாதிகள். ஆதரிக்காதவர்கள் தேசியவாதிகள் அல்ல என்ற எண்ணத்தில் செயற்படுகிறார்கள். சஜித்துக்குப் போட்டவர்கள் போட்டடும், அரிநேந்திரனுடன் நின்றவர்கள் நிற்கட்டும் என விட்டிருக்கலாம். ஆனால், சஜித்தை ஆதரிக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வெளிக்கின்றீர்கள் என்றால், உங்களது பின்புலம் என்ன என்ற கேள்வி கேட்டுத்தானே ஆக வேண்டும். உங்களது அடிமனதில் உள்ளது தேசிய நீக்கம். அதற்காகக் கொண்டு வரப்பட்ட நீங்கள் கட்சியிலும் அதனை செய்யப் பார்க்கிறீர்கள்.

முல்லைத்தீவில் போட்டியிடுபவர்கள் அங்கு கட்சி வளர்த்த மாவை ஐயா அல்லது சம்பந்தன் ஐயா, செல்வநாயகம் ஐயாவின் படத்தைப் போட்டிருக்கலாம். அதை விடுத்து கள்ளன் என விடுதலைப் புலிகளால் திரத்தப்பட்டவனை, சங்கத்தில் இருந்து பணத்தைக் கொள்ளையடித்த ஒருவரியைப் படத்தைப் போட்டுத் தேர்தல் கேட்டால் எப்படி வெல்ல முடியும். ஆகவே காலம் பதில் சொல்லும் என தெரிவித்தார்.

## கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணி ஆரம்பம்

கடற்படை கொமாண்டர் வீரசேகர மற்றும் கெப்டன் சரித குணவத்த உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையிலான குழு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா, பிரபாசன மற்றும் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கும் இந்த பணிக்குத் தன்னார்வ குழுக்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவும் குறைவின்றி கிடைத்தது.

கண்டி நகருக்கு வரும் உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கண்டி குளம் பெரிதும் கவர்ந்திருப்பதோடு, பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகள் குளத்தில் கிடப்பதால் நீர் மூலங்கள் மற்றும் நீர் வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

நாட்டிற்குள் சுற்றாடல் மற்றும் சமூக மற்றும் மனப்பான்மை ரீதியான மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதன் ஊடாக சமூகத்தை மிக உயர்வான நிலைக்கு உயர்த்தி வைக்கும் நோக்கில் கீழ் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் சுற்றாடல் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்படுவதோடு, கழிவுகள் அற்ற சுற்றாடலைப் பேணவும் மக்கள் மத்தியில் மனப்பான்மை மேம்படுத்துவதற்கான பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன்படி "சிறி தலதா வழிபாடு" உடன் இணைந்ததாக நடைபாவிய ரீதியில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் கண்டி நகரத்தை அண்மித்து 10 நாட்களாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

## 24 மணிநேர சேவை நிறைவு

"நீடிக்கப்பட்ட இந்த சேவை, கடவுச்சீட்டுகளை வழங்கலை சீராக்க உதவியதுடன், நீண்ட வரிசைகள் மற்றும் தாமதங்களைக் குறைக்க பெரிதும் உதவியதாக அமைச்சர் குறிப்பிட்டார். 24 மணி நேரச் சேவை, நிலுவையிலிருந்த கடவுச்சீட்டுக்களை வழங்கும் பணிகளைச் சீராக்கியுள்ளதுடன், தற்போது திணைக்களத்தின் நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதை தம்மால் அவதானிக்க முடிவதாக அமைச்சர் குறிப்பிட்டார். இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த, நாம் தொடர்ந்தும் 24 மணி நேர சேவையை முன்னெடுக்கின்றோம். மேலும் ஒரு மாதத்திற்கு நிலைமையை அவதானிப்போம். விடயங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினால், எம்மால் நிலையான 08 மணி நேரச் சேவைக்குத் திரும்பக்கூடியதாகவிருக்கும்.

யாழ்ப்பாணத்தில், குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலக கிளையைத் திறப்பதைப் பொறுத்து இதுதொடர்பான இறுதி முடிவு அமைந்திருக்கும். பொதுமக்களுக்கு உறுதியளித்தவாறு தற்போதைய கடவுச்சீட்டு வழங்கும் செயல்முறை திறமையாக இடம்பெறுகிறது.

இந்த நடவடிக்கைகள் சுமுகமாகக் கையாளப்படுகிறது. தற்போது கடவுச்சீட்டு அலுவலகத்தில் நீண்ட வரிசைகள் இல்லை. இதனிடையே, பயண ஆவணங்களை நவீனமயமாக்குவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை அமைச்சு எடுக்கவுள்ளது. அடுத்த வாரம் இ-கடவுச்சீட்டுக்களை (e-passports) வாங்குவதற்கான விளம்பரங்களை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பான உத்தியோகபூர்வ வெளியீட்டுத் திகதி இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், அனைத்து திட்டத்தின் படி நடந்தால், இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் இ- கடவுச்சீட்டுக்களை வழங்கக்கூடியதாகவிருக்கும். இது தொடர்பாக, குடிவரவு  குடியகல்வு திணைக்களர் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் தொழில்நுட்ப விவரங்கள் வழங்கப்படும். இ- கடவுச்சீட்டுகளை இறக்குமதி செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை"என அவர் மேலும் தெரிவித்தார்.

## உ/த மீளாய்வுக்கு 16 வரை காலக்கெடு

இம்முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 1,77,588 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் 456 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்தது.

## மைத்திரிபால சாட்சியாக ஆஜர்

2008 ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் திகதி பொரலஸ்கமுவ பகுதியில் அப்போதைய விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் நோக்கில் தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு உதவியதாக இரண்டு நபர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு திங்கட்கிழமை (28) அன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முன்னதாக விடுக்கப்பட்ட அறிவிப்பின்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜரானார்.



## இ.போ.சபைக்கு 10 முடிவுகள்

* புத்தளம் பாதையில் ஒருங்கிணைந்த நேர அட்டவணையை உடனடியாக செயல்படுத்துதல்.
* 138ஆவது வழித்தடத்தில் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்குதல், அனைத்து பேருந்துகளையும் ஒரே சங்கத்தின் கீழ் லாபப் பகிர்வு பொறிமுறையுடன் இயக்குதல்.
* அனைத்து பேருந்துகளிலும் ஜிபிஎஸ் கண்காணிப்பு மற்றும் சி.சி.ரிவி. கெமராக்களை கட்டாயமாக நிறுவுதல்.
* டிஜிட்டல் அமைச்சகத்துடன் இணைந்து நிகழ்நிலை பற்றுச்சீட்டு முன்பதிவு முறையை உருவாக்குதல்.
* பேருந்து ஓட்டுநர்களுக்கு திடீர் போதைப்பொருள் மற்றும் மது சோதனை நடத்துதல்.
* டிக்கெட் இயந்திரங்கள் மூலம் டிக்கெட் வழங்குவதைக் கட்டாயமாக்குதல் (சலுகைக் காலம் வழங்கப்படும்).
* பயணிகள் பேருந்துகளுக்கான விவரக்குறிப்புகளை நிறுவுதல்.
* பேருந்து ஓட்டுநர்கள் சீட் பெல்ட்களை பயன்படுத்தலைக் கட்டாயமாக்கல்
* புதிய பேருந்துகளுக்கு புதிய வழித்தடங்களை ஒதுக்குவதற்கான ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துதல்.
* NTC, SLTB மற்றும் ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனி எண்களைக் பயணிகள் புகாரளிப்பதற்கான முறைப்பாடளிக்க அனைத்து பேருந்துகளிலும் வட்ஸ்அப் எண்களைக் காட்சிப்படுத்தல்.

இந்த முடிவுகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான முதற்கட்ட பணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ரத்நாயக்க அறிவுறுத்தினார், மேலும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

# “சாமர என்ன ஊழல் செய்தார்?”

■ எஸ்.சதீஷ்

“ஊழல் செய்தவர்கள் தான் பயப்பட வேண்டும் நாங்கள் பயப்பட வேண்டிய அவசியம் எமக்கு இல்லை சில அரசியல் வாதிகளிடம் கருப்புப் பணம் இருப்பதாகக் கூறினார்கள். ஆட்சிக்கு வந்தால் நடவடிக்கை எடுப்போம் என கூறினார்கள் ஆனால் இன்று முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் என்ன ஊழல் செய்தார் ?” என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நுவரெலியாவில் திங்கட்கிழமை (28) அன்று இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்

இந்த பிரச்சார கூட்டத்தில், கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.சக்திவேல், நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேலு யோகராஜ் மற்றும் கட்சியின் ஆதரவாளர் என பலரும் கலந்து கொண்டனர்

இதன் போது ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண அமைச்சில் உள்ள நிதியில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வாங்கி கொடுத்ததினால் சாமர சம்பத் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்




பலத்தை வைத்தே மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளம் ஆயிரத்து 350 ரூபாய் பெற்றுக்கொடுத்தது. 2020ஆம் ஆண்டு 28 வயதில் இராஜாங்க அமைச்சராகப் பதவி ஏற்றும் ஆயிரம் ரூபாவினை பெற்றுக் கொடுத்தேன்.

அதேபோல், 2023ஆம் ஆண்டு அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை பொறுப்பேற்று 130 ரூபாவை பெற்றுக்கொடுத்துள்ளேன். அதன் போது கூட ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மறுதபாண்டி ராமேஸ்வரன் மாத்திரம் பக்கத்தில் வைத்திருந்தேன்.

எம்மிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கவில்லை காங்கிரஸ் என்ற பலம் மாத்திரமே இருந்தது. முடியுமாக இருந்தால் 1,700 ரூபாய் அடிப்படை சம்பளத்தைத் தோழர் அவர்களைப் பெற்றுக்கொடுக்குமாறு சவால் விடுகிறேன். தேர்தலுக்கு முன்பு பல்வேறு விடயங்களைப் பேசியவர்கள் இன்று மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் நிதி ஒதுக்கீடு என கூறி மலையக மக்களை ஏமாற்றுகிறார்கள் இது தான் உண்மை மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதியை விமர்சித்து அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை அன்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்ததைப் பொருட்டு மலையக மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை. அதற்கு இந்திய அரசாங்கத்தைக் குறை கூற முடியாது மலையக பிரதிநிதிகள் கோரிக்கையை முன் வைக்க வேண்டும் .

மக்களின் வாழ்க்கை நிலையை மாற்ற வேண்டும் என நினைத்தால் இந்த அரசாங்கத்தின் பக்கம் 159 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வைக்கின்றனர் இவர்கள் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் கடந்துள்ளது. எவ்வித மாற்றங்களும் இவர்கள் கொண்டுவரவில்லை” என்றார்.

## கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணி





பத்துநாள் ‘ஸ்ரீ தலதா வழிபாடு’ நிறைவில் கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணியை ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயலகம் மற்றும் கடற்படை என்பன இணைந்து முன்னெடுத்துள்ளன.













## மின்னல் தாக்கியதில் ஐவர் வைத்தியசாலையில்

அனுராதபுரத்திற்கு யாத்திரை சென்று பசவக் குளம் (அபய) வாவியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் மீது மின்னல் தாக்கியதில் ஐந்து பேர் அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அனுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல, வல்பொல மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த 24, 30, 38 மற்றும் 48 வயதுடைய ஐந்து பேரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (27) மதியம் மின்னல் தாக்கிய போது, யாத்ரீகர்கள் குழு குறித்த வாவியில் குளித்துக் கொண்டிருந்ததாகவும், ஒருவர் தொலைபேசி அழைப்பொன்றில் இருந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மின்னல் தாக்கத்தில் பசவக்குளம் வாவியின் குளிக்கும் பகுதிக்கு அருகில் இருந்த ஒரு பெரிய மரத்தின் கிளை முறிந்து, மரத்தின் வேர்கள் வரை பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமை காணக்கூடியதாக உள்ளது.

## ஆசிரியையை தாக்கிய ஆசிரியைக்கு சிறை

துடைப்பக் கைப்பிடி மற்றும் குடையால் தாக்கி ஆசிரியை ஒருவரைக் காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆசிரியையைக் குற்றவாளி என கண்டறிந்த அனுராதபுரம் மேலதிக நீதவான் பி.கே. சமரசிங்க, அந்த ஆசிரியைக்கு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டு, குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஆசிரியருக்கு ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத் தண்டனை விதித்துள்ளார். பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் அபராதம் செலுத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், முறைப்பாடு செய்த ஆசிரியைக்கு முப்பதாயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு பிரதிவாதியான ஆசிரியைக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மிஹிந்தலை, கன்னடிய, கல்வல சந்திப்பில் வசிக்கும் ஒரு பெண் ஆசிரியரைத் துடைப்பக் கைப்பிடி மற்றும் குடையால் தாக்கி காயங்களை ஏற்படுத்தியதாக 54 வயதான ஆசிரியைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2021 செப்டெம்பர் 30, மிஹிந்தலை, கன்னட்டியவைச் சேர்ந்த 59 வயதான ஆசிரியையின் வீட்டுக்குள் நுழைந்து, இந்த தாக்குதலை ஆசிரியையை மேற்கொண்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியையால் தாக்கப்பட்ட ஆசிரியை, மிஹிந்தலை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

தனது தோட்டத்தில் உள்ள ஒரு வெறிச்சோடிய கிணற்றில் இரண்டு காட்டுப்பன்றிகள் விழுந்து இறந்து விட்டதாகவும், அது துர்நாற்றம் வீசுவதாகவும் கூறியதற்காக முறைப்பாட்டாளரான ஆசிரியை திட்டிய பின்னர், குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியை இந்த தாக்குதலை நடத்தியதாகவும் நீதிமன்ற விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

## மின்னல் தாக்கத்தில் வீடு சேதம்; 7 பேர் பாதிப்பு

■ எஸ்.தில்லைநாதன்

மின்னல் தாக்கம் காரணமாக வீடொன்று பகுதியளவில் சேதமடைந்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு வீடொன்றே இவ்வாறு வீடு சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவத்தில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வீட்டின் மீது மண்சரிவு; சிறுமி படுகாயம்

■ பாலித ஆரியவன்ச

பதுளை, ஹாலி-எல பகுதியில் உள்ள வீடொன்றின் மீது ஞாயிற்றுக்கிழமை (27) அன்று ஏற்பட்ட மீது மண்சரிவில் சிறுமியொருவர் படு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் பெய்த கனமழையின் போது, ஹாலி எல உடுவர, கிரவணா கொட பகுதியில் உள்ள வீடொன்றின் மீது ஏற்பட்ட மண்சரிவில் காயமடைந்த சிறுமி தற்போது சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த வீட்டில் ஒரு படுக்கையறை கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும், குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டு உறவினர் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மரக்குற்றிகளை கடத்திச் சென்ற ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து ஏ-35 பிரதான வீதி ஊடாக சிறிய ரக லொறி ஒன்றில், பெறுமதி மிக்க 12 முதிரை மரக்குற்றிகளுடன் பயணித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தருமபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## காய்ச்சல் காரணமாக பெண் உயிரிழப்பு

■ எஸ்.தில்லைநாதன்

யாழில். காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று உயிரிழந்துள்ளார்.

2ஆம் குறுக்கு தெரு, கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய கமலநாதன் ராஜபத்மினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், குறித்த பெண்ணுக்கு சனிக்கிழமை (26) காலை காய்ச்சல் ஏற்பட்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை(27) மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை (28) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## பிறப்புறுப்பை கடித்த நாய்; சிறுவன் மரணம்

காலி தேசிய வைத்தியசாலையில் ஏழு வயதுடைய சிறுவன் நீர் வெறுப்பு நோயால் ஞாயிற்றுக்கிழமை(27) அன்று உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் வளர்த்து வந்த நாய் சிறுவனின் பிறப்புறுப்பு பகுதியைக் கடந்த மாதம் கடித்துள்ளதாகவும், பின்னர் சிறுவன் இது குறித்து வீட்டாரிடம் எதுவும் கூறாமல், கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பின்னர் சிறுவனின் உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து, சிகிச்சைக்காக காலி தேசிய வைத்தியசாலையில் கடந்த 24ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

பிரேதப் பரிசோதனையின் பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் அதிபர் மரணம்

■ ஆறுமுகம் புவியரசன்

கந்தேகெதர பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலையொன்றின் அதிபர் உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (28) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கந்தேகெதர- அலுகொல்ல வீதியின் சார்ணியா தோட்ட கொல்லுமண்டி பிரிவில் உள்ள ஆற்றங்கரைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் குறித்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வடிகானுக்குள் பாய்ந்து விபத்திற்குள்ளானதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த, பதுளை மாவட்டத்தின் வியலுவ கல்வி வலயத்திற்குட்பட்ட சார்ணியா இல.01 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ஆ.ரவிச்சந்திரன் (59 வயது)உயிரிழந்துள்ளார்.

குறித்த பாதையில் முன்னால் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியை முந்திக் கொண்டு பயணிக்க முனைந்த போது விபத்து



இடம்பெற்றுள்ளதுடன் விபத்தில் படுகாயமடைந்த அதிபரை உடனடியாக கந்தேகெதர ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தந்தையான இவர் இதற்கு முன்னர் கோபோ தமிழ் வித்தியாலயம், சார்ணியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக கடமையாற்றியுள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக சடலம் பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தேகெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்னல் தாக்கம் தொடர்பில் எச்சரிக்கையாக இருப்போம்

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், பல மாவட்டங்களுக்கு மின்னல் தாக்கம் தொடர்பில் அவ்வப்போது எச்சரிக்கை விடுத்து வந்தாலும், மின்னல் தாக்கங்களுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. வயல் வெளிகளுக்குச் செல்வோரே, எதிர்பாராத விதமாக மின்னல் தாக்கங்களுக்குள் சிக்கிக்கொள்கின்றனர்.

மின்னல் தாக்குதல் என்பது மேகத்திலிருந்து தரைக்கு வேகமாகப் பயணிக்கும் மிகவும் சக்திவாய்ந்த மின்சாரமாகும். அதிலிருந்து ஒரு பெரிய சத்தமும் வெளிச்சமும் வருகிறது. முதலில், ஒளி தெரியும். திடீரென்று, சத்தம் கேட்கிறது. வெளிச்சத்தை உணர்ந்தவுடன் உங்கள் காதுகளை மூடுவதன் மூலம், உங்கள் செவிப்புலன் அமைப்பில் சத்தத்தின் சாத்தியமான தாக்கத்தைத் தடுக்கலாம்.

மின்னலை நேரடியாகக் கவனிப்பதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் இந்த மிகவும் வலுவான ஒளி கண்களுக்குத் தீங்கு விளைவிக்கும். அதுமட்டுமன்றி, மின்னல் தாக்கத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பிலும் அவ்வப்போது அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. எனினும், பலரும் அதனைக் கவனத்தில் எடுப்பதில்லை.

உயரமான மலைச் சிகரம், விளையாட்டு மைதானம், குளம் அல்லது நீர்த்தேக்கம் போன்ற திறந்தவெளியில் நிற்க வேண்டாம். அத்தகைய இடங்களில் சைக்கிள் அல்லது குதிரை சவாரி செய்வதைத் தவிர்க்கவும். உடனடியாக ஒரு வீட்டிற்குச் செல்லுங்கள் அல்லது மிக உயரமாக இல்லாத மரங்கள் உள்ள ஒரு மரத்தின் அடியில் செல்லுங்கள் என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படி ஒரு இடம் இல்லையென்றால், உங்கள் கைகளைத் தரையில் வைக்காமல், உங்கள் கால்களை ஒன்றாக இணைத்து நிற்கவும், உங்கள் உயரம் குறையும் வகையில் உங்கள் தலையைத் தாழ்த்தி நிற்கவும். கம்பி வேலிகள், தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்கள் மற்றும் தொலைக்காட்சி ஆண்டெனாக்கள் போன்ற உலோக கட்டமைப்புகளிலிருந்து விலகி இருங்கள். உலோகக் கருவிகள் அல்லது உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம். உங்களிடம் இதுபோன்ற பொருட்கள் இருந்தால், அவற்றைத் தூக்கி எறியுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கத்தால், மனிதர்கள் மட்டுமன்றி, வளர்ப்பு மிருகங்களும் பெருந்தொகையில் இறந்துவிடுகின்றன. ஆகையால், வானிலை முன்னெச்சரிக்கையைக் கவனத்தில் எடுத்தால், இந்தமாதிரியான அசாதாரண உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

இருள் சூழ்ந்த வானம், மின்னல் மற்றும் இடி ஆகியவை ஆபத்தின் ஆரம்ப அறிகுறிகளாகும். நீங்கள் இடி சத்தம் கேட்டால், மின்னல் தாக்கும் தூரத்தில் இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மின்னலின் புலப்படும் மின்னலுக்கும் இடி முழக்கத்தின் கேட்கக்கூடிய சத்தத்திற்கும் இடையிலான நேரம் 15 வினாடிகளுக்குக் குறைவாக இருந்தால், கடுமையான ஆபத்து உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறர் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்க செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவற்றில் அக்கறை கொண்டு இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றயவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல; சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### "வீதியை புரனரமைத்து தாருங்கள்"

லிந்துலை முதல் டயகம வரையிலான பிரதான வீதி பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யாமல் காணப்படுகிறது. இருப்பின் டயகம நகரப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பாதை அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்பணி முறையாக இடம் பெறாத காரணத்தினால் வீதி முறையற்ற வகையில் புரணரமைக்குமாறு கோரி அப் பகுதி மக்கள் கடும் மழையில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பி தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், இதில் 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

புனரமைப்பு செய்யப்பட்ட வீதி போக்குவரத்துக்கு இலக்கிய அற்ற நிலையில் பாதை காணப்படுவதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

-எஸ்.சதீஸ்




## வாக்களிக்க முன் முஸ்லிம்கள்;

# சிந்திக்க வேண்டிய விடயங்கள்

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் பெரியளவில் களைகட்டவில்லை என்ற தோற்றப்பாடு ஏற்பட்டிருந்த போதும், வாக்களிப்பு தினத்தை நெருங்கி விட்டோம். தபால்மூல வாக்களிப்பின் இரண்டாம் கட்டம் இன்றுடன் நிறைவடைகின்றது. தேர்தல் பிரச்சாரங்கள் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

'குட்டித் தேர்தல்' என்று இந்தத் தேர்தல் அழைக்கப்பட்டாலும் இதன் முக்கியத்துவத்தை, இதன் பின்னாலுள்ள அரசியலை, எதிர்கால தேசிய அரசியல் ஆளுகையில் இது எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் என்பதைக் கட்சி பேதங்களுக்கு அப்பால் நின்று மக்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஏந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இயல்பாகவே, சிங்கள மக்களின் நலன்களை அந்த ஆட்சியாளர்கள் கவனித்துக் கொள்வார்கள். சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பல்லின நாடு என்பதால் அது தானாகவே நடந்தேறி விடும். ஆனால், ஏனைய சமூகங்களின் நிலை இதிலிருந்தும் மாறுபட்டது.

முஸ்லிம்களும். தமிழர்களும் அதேபோன்று மலையக மக்களும் இந்தத் தேர்தல் எவ்வாறான சாதக, பாதக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை இப்போதே உணர்ந்து கொண்டு, தாங்கள் யாருக்கு புள்ளடியிடுவது என்பதைத் தீர்க்கமாக முடிவெடுப்பது அவசியம்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்ற காலங்களை விட நாட்டில் இப்போது ஒரு ஸ்திரமான நிலை இருப்பதான தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. நாட்டு நிலைவரம் காரணமாக:, அவ்விரு இரு தேர்தல்களையும் எதிர்கொள்வதற்கான மனநிலை குறைவாக இருந்தாலும், ஜனாதிபதி மற்றும் ஆட்சி மாற்றத்தை மக்கள் வெகுவாக அவாவி நின்றனர் எனலாம்.

ஆனால், அந்தத் தேர்தல்களில் மக்கள் காட்டிய ஆர்வத்தை விட ஒரு சதவீதமாவது குறைந்த ஆர்வத்தை, ஈடுபாட்டையே உள்ளூராட்சித் தேர்தல்களில் வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது. இதனைப் பல அவதானிகளும் அமைப்புக்களும் கூட சுட்டிக்காட்டியுள்ளன. இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம்.

வேட்புமனுக்கள் நிராகரிப்பு, அதற்கெதிரான மனுக்கள் மீதான நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகப் பல வாரங்கள் சென்றமை, சிறிய தேர்தல் என்பதால் பெரிய அரசியல்வாதிகள் களத்தில் இறங்கிப் பரபரப்பை ஏற்படுத்தாமை, தேர்தல் நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கி விடுகின்றமை, தேர்தல் பிரசாரத்தின் முக்கியத்துவம் அறியாத வேட்பாளர்கள் எனப் பல உள்ளன.

ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட கட்சி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிவிட்ட நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் பெரிதாக என்ன நடந்து விடப் போகின்றது என்ற ஒரு எண்ணமும் குறிப்பாகப் பல பகுதிகளில் வாழ்கின்ற சிறுபான்மைச் சமூகங்களிடையே ஏற்பட்டிருப்பதும் ஒரு காரணமாகத் தெரிகின்றது. இது ஒரு ஆரோக்கியமற்ற நிலைப்பாடாகும்.

உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதித்துவம் தான் நேரிடையாக மக்களுக்கு நெருக்கமான அரசியல் பிரதிநிதித்துவமாக இருக்கப் போகின்றது. ஜனாதிபதியை, எம்.பியை விட மாநகர, நகர, பிரதேச சபையின் உறுப்பினர்தான் மக்களுக்கு நெருக்கமான ஒருவராக இருக்கப் போகின்றார். இது ஒவ்வொரு வீடுகளிலும் தாக்கம் செலுத்தும்.

அதுமட்டுமன்றி, நாம் முன்னைய பத்திகளில் குறிப்பிட்டதைப் போல, இலங்கை அரசியலின் கடந்தகால பதிவுகளின் அடிப்படையில் நோக்கும் போது, மேல்மட்ட அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான கீழ்மட்ட அரசியல் மேடையாக உள்ளூராட்சி சபை பிரதிநிதித்துவங்கள் அமைகின்றன.

அநேக சந்தர்ப்பங்களில், உள்ளூராட்சி சபைகளில் இருந்துதான் மாகாண சபைகளுக்கும் பிறகு பாராளுமன்றத்திற்கும் செல்வதற்காகப் போட்டியிடுகின்றனர். எனவே, இது ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆகும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு சரியான உறுப்பினர்களைத் தெரிவு செய்யவில்லை என்றால், அடுத்த 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மாகாண சபைகளுக்காகவும் நாடாளுமன்றத்திற்காகவும் நல்ல அரசியல்வாதிகளைப் புடம்போட முடியாமல் போய்விடும் என்பதை மறந்து விடக் கூடாது.

ஆகவே, சிறுபான்மைச் சமூகங்கள் சில விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தமிழ்ச் சமூகத்தில் ஓரளவுக்கு தெளிவூட்டல் நடைபெறுகின்றது. ஆனால், முஸ்லிம் சமூகத்திலும் மலையக மக்கள் விடயத்திலும் அந்த நிலைமையைக் காண முடியாதுள்ளது.

சிறுபான்மைச் சமூகங்கள் பொருத்தமான, மிகச் சிறந்த ஒப்பீட்டுத் தெரிவாகக் கருதப்படும் வேட்பாளர்களுக்கு, கட்சிகளுக்கு வாக்களிக்கின்ற அதேநேரத்தில், தமக்கான சொந்த அரசியலின் எதிர்காலம் குறித்தும் சிந்திக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்ட தனித்துவ முஸ்லிம் அரசியலை, அதன் தலைவர்களும் தளபதிகளும் நாசமாக்கியிருக்கின்றார்கள் என்பதும், அதனால் மக்கள் வெறுப்படைந்திருக்கின்றார்கள் என்பதும் பட்டவர்த்தனமானது.

இந்நிலையில், இதனை சரிப்படுத்துவதற்கான அல்லது மக்கள் விரும்பிய மாற்றத்தை இத் தேர்தலிலாவது கொண்டு வருவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட முஸ்லிம் கட்சிகள் மிகக் குறைவாகவே எடுத்திருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சி எம்.பிக்கள், வேட்பாளர்களை களமிறக்கினால் அவர்கள் எதையாவது பேசி குழப்பி விடலாம் என்று எண்ணி ஜனாதிபதியே நேரடியாகக் களமிறங்கியிருக்கின்றார் என்று சொல்வதை விட, இந்த தேர்தலின் முக்கியத்துவம் உணர்ந்து பிராசாரக் களத்தில் அவர் இறங்கியுள்ளார் என்று சொல்வதே மிகப் பொருத்தமானது.

ஆனால், இந்த தாற்பரியத்தை உணர்ந்து முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் வியூகங்களை வகுத்ததாகவோ, நல்ல வேட்பாளர்களை நூறு சதவீதம் எல்லா வட்டாரங்களிலும் களமிறக்கியுள்ளதாகவோ கருத முடியவில்லை.

ஆனால், இதனையெல்லாம் மீறி ஏனைய சிறுபான்மைச் சமூகங்களைப் போல முஸ்லிம் பொது மக்களுக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பிருக்கின்றது. தமக்கான சொந்த அரசியல் பற்றி தூரநோக்கோடு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் இன, மத பேதங்களுக்கு அப்பால், தமது வட்டாரத்தில் போட்டியிடுகின்ற பொருத்தமான ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கலாம். இங்கு முஸ்லிம் வாக்காளராக அவர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பொருந்தாது. அங்கு வாழும் ஏனைய சமூகங்களின் மக்களுக்கு ஒத்திசைவான முடிவை எடுப்பதே நல்லது.

ஆனால், வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் இதற்கப்பாலான சில கடப்பாடுகளைக் கொண்டுள்ளனர். ஒரு ஆபத்துக்கு உதவுவதற்காகவாவது தங்களுக்கான சொந்த அரசியல் கட்டமைப்பைத் தக்கவைப்பது அவசியம் என்று முஸ்லிம் சமூகம் கருதுமாயின், அதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் கொண்டுள்ளனர்.

இதுபோன்ற கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்தில் கடந்த சில நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது என்பதும், முஸ்லிம் சமூக அமைப்புக்கள் இது விடயத்தில் யாரையோ பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக ஒரு நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கின்றன என்பதும், ஒருவித மனக் கிலேசத்தை ஏற்படுத்தாமல் இல்லை.

மக்கள் வாக்களிக்கும் போது தமது வட்டாரத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களது கட்சியைச் சரிவர ஆராய வேண்டும். ஒரு வேட்பாளர் என்ன கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார்? அவரது பின்னணி என்ன? கடந்தகாலத்தில் அவர் இந்த சமூகத்திற்கு என்ன செய்துள்ளார்? என்று பார்க்க வேண்டும்.

உங்களது சுய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், சமூகம் என்ற பார்வையில் இதனைச் சிந்திக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் முஸ்லிம் கட்சிகளால் நிறுத்தப்பட்ட வேட்பாளர் உண்மையிலேயே பொருத்தமற்றவர் என கருதப்படும் பட்சத்தில், மறுபுறத்தில் பெரும்பான்மைக் கட்சி ஒன்றில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் பொருத்தமானவராக, கட்சி அரசியலை விட சமூக அரசியலுக்கு முன்னுரிமை கொடுப்பவராக நம்பப்பட்டால், அவர்தான் ஒப்பீட்டுத் தெரிவாக இருப்பார்.

ஒரு குறிப்பிட்ட உள்ளூராட்சி சபையில் முஸ்லிம் தனித்துவ கட்சிகள் சார்பாக நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்கள் கீழ்த்தரமான காரியங்களில் ஈடுபடாதவராக, தடுக்கப்பட்ட தொழில் பின்னணியைக் கொண்டிராதவராக, குறுக்கு வழியில் பணம் உழைப்பவராக அன்றி, சமூக நலன் பற்றிச் சிந்திப்பவராகச் சிறப்பானவராக, மக்களுக்குச் சேவை செய்பவராக, நம்பிக்கைக்குரியவராக இருந்தால், அவருக்கு வாக்களிக்காமல் விடுவதன் பின்விளைவுகள் குறித்து பலமுறை சிந்திக்க மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

ஒருசில வட்டாரங்களில் எந்தக் கட்சியாலும் நிறுத்தப்பட்டுள்ள எந்த வேட்பாளரும் பொருத்தமில்லை என்று, ஆய்வுத்திறன் கொண்ட வாக்காளர் ஒருவர் கருதலாம். ஆனால், அதற்காக வாக்களிக்காமல் விட்டு விடக் கூடாது.

ஏனைய தேர்தல்களை விட ஒரு வகையில் இந்தத் தேர்தல் மிக முக்கியமானது. குறிப்பாக, முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலை சமூகத்திற்கு உகந்ததாக மீளப் புனரமைக்க வேண்டும் என்று முஸ்லிம் மக்கள் நினைக்கின்றனர் என்றால் அதற்கான களமும் இதுவாகும்.

எனவே, எல்லா சமூகங்களைச் சேர்ந்த மக்களும் கட்டாயம் இத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்தை தம்முடன் கொண்டு செல்வது அவசியம்.

வாக்குச் சீட்டில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்கள், சின்னங்கள் மாத்திரமே இருக்கும். விருப்பு இலக்கங்கள் இருக்காது. எனவே, நீங்கள் விரும்பிய கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு எதிரே உள்ள கூட்டில் சரியாக புள்ளடியிடுவதன் மூலம், அந்தக் கட்சியில் உங்களது வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.

எனவே, தமது உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அதிகாரம், வட்டாரங்களின் பிரதிநிதித்துவம் யார் கையில் இருப்பது நீண்டகால அடிப்படையில் ஒரு சமூகமாக நமக்கு நல்லது என்பதை ஆற அமர சிந்தித்து முஸ்லிம்களும் ஏனைய சமூகங்களும் வாக்களித்தால் போதுமானது.

# காண்பியக் காட்சி

## கே.கே.எஸ். வீதி அன்றும் இன்றும் வண்ணார்பண்ணை அத்தியாயம்





க.டிலக்ஷன்,
நுண்கலைத்துறை,
4ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

'கே.கே.எஸ் வீதி அன்றும் இன்றும் வண்ணார்பண்ணை அத்தியாயம்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையின் ஏற்பாட்டில் ஒளிப்படக்காட்சி 22.04.2025 – 26.04.2025 வரையான காலப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முகக்கூடத்தில் நடைபெற்றது. இக்காட்சியானது வீதி அகலிப்பு, முன்னும் பின்னும் இருந்து தெரிவு செய்யப்பட்ட இடங்கள், கட்டடங்களை ஒப்பீடாகக் கொண்டு ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

2010 இல் ஆயுதப்போராட்டம் முடித்துவைக்கப்பட்ட மறுவருடம் 'வடக்கின் வசந்தம்' என்ற பெயரிலான பாரிய அபிவிருத்தித் திட்டமொன்றை இலங்கை அரசு வடக்கில் ஆரம்பித்தது. அதன் வேலைத் திட்டங்களில் முக்கியமானவொன்றாக உட்கட்டுமான அபிவிருத்தி முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரதான பகுதியாக வீதிகளை அபிவிருத்தி செய்தல் என்ற திட்டம் முன் வைக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டின் முதல் இலக்காக கே.கே.எஸ். வீதி தெரிவு செய்யப்பட்டிருந்தது. இங்கு காங்கேசன்துறை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலாக 23 கிலோ மீற்றர் தூரம் நீண்டுள்ள இவ்வீதி யாழ்ப்பாணத்தின் பழமையான வீதியும், வரலாற்றுப் பண்பாட்டுத் தடயமும் ஆகும். குறிப்பாக வண்ணார் பண்ணையை ஊடறுக்கும் பகுதி என்பது 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காலனிய மற்றும் சுதேசிய நிலவரங்களின் எதிர்வினைப்புலத்தில் உருவான பண்பாட்டு வரலாற்றின் தடயங்களைக் கொண்ட இடமாகக் காணப்பட்டதுடன் பெருமளவுக்கு வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை மையமாகக் கொண்டே இப்பகுதி விரிவடைந்திருந்தது. இவ் ஆலயத்தினை சுற்றிப் பலவகையான கைவினைஞர் குழுக்கள், இசைவேளாளர் குடும்பங்கள். கோயில் நடனக்காரர்கள். அலங்காரம் செய்வோர். அர்ச்சகர் குடியிருப்புக்கள் என்பவற்றோடு பரிவாரக் கோயில்களையும் கொண்டமைந்து காணப்பட்டது. அத்துடன் வர்த்தக நிலையங்கள், கிட்டங்கிகள், கைவினைஞர்களது பட்டறைகள், மடங்கள். மற்றும் நாடகக் கொட்டகைகள் என்பனவற்றையும் உள்ளடக்கிய ஒன்றாக அது காணப்பட்டதுடன் நாவலரது முதற்பாடசாலை அவரது அச்சகம், நாவலர் மரபோடு பொருந்திய கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்த கில்னர் அவர்களது கில்னர் மண்டபம், கலைப் புலவர் நவரத்தினத்தின் கலா நிலையம் என்பனவும் ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கம், நாவலர் பரம்பரையினரால் ஆரம்பிக்கப்பட்ட சைவபரிபாலன சபை, அவர்களது இந்துசாதனம் பத்திரிகை அலுவலகம், யாழ். இந்துக் கல்லூரி, யோகர் சுவாமிகளது சிவதொண்டன் நிலையம். அதனை விடவும் அப்பகுதியில் அமையப் பெற்றிருந்த பல சித்தர் மையங்கள் உட்பட யாழ்ப்பாண மறுமலர்ச்சியின் 19ஆம் 20ஆம் நூற்றாண்டின் சின்னங்கள் பலவற்றையும் காவியதன் மூலம் யாழ்ப்பாணத்தின் மரபுரிமை தெருக்களுள் முக்கியமான ஒன்றாக கே.கே.எஸ் வீதி காணப்பட்டது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறை இவ்வேலைத்திட்டம் ஒருவகையான பண்பாட்டு வரலாற்றுத் தடய அழிப்பு என்பதைச் சுட்டிக்காட்டியதோடு பல முயற்சிகளையும் அழுத்தங்களையும் வழங்கியது.

இந்நிலையில், 2010 இல் யாழ்ப்பாணத்தவர் இழக்கப்போகும் நகரத்தை ஆவணப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண் கலைத்துறை ஒளிப்பட வடிவிலான ஆவணப்படங்களை மேற்கொண்டது. அவ்வாறு 16 வருடத்திற்கு முந்திய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இன்று மீளவும் 2025 இல் யசோதரனால் படம் பிடிக்கப்பட்ட ஒளிப்படங்களை ஒப்பிடுகைத் தன்மையில் இக்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இக்காட்சியில் 52 ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காட்சி படுத்தலில் ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், கிட்டங்கிகள் குடியிருப்புக்கள், மடங்கள், பாடசாலைகள், கைவினைஞர்களது பட்டறைகள், நாடகக் கொட்டகைகள் போன்ற யாழ்ப்பாண மறுமலர்ச்சியின் 19ஆம் 20ஆம் நூற்றாண்டின் சின்னங்கள், மரபுரிமை சொத்துக்கள் அழிவடைந்தும் அழிவடையாமலும் மாற்றம் அடைந்தும் காணப்படுவதனை இந்த ஒளிப்படங்களின் ஊடாக அவதானிக்க முடிகின்றது. அதாவது 16 ஆண்டுகளுக்கு முற்பட்ட கைவினைப் பட்டறைகள், கைவினைஞர்கள், இன்று உயிருடன் இல்லாத சில கைவினைஞர்கள் முதல் சிறு மாற்றங்களுக்கு உட்பட்டு உள்ள அதாவது வர்ணம் கட்டுமான அமைப்பு என்பவை மாற்றத்திற்கு உள்ளாகியுள்ள யாழ்ப்பாண இந்துக்கல்லூரி காணமுடிகின்றது. மேலும் இந்த ஒளிப்படங்கள் மூலம் சில தெருவோர நாச்சார வீடுகள் வர்த்தக நிலையங்கள் மற்றும் சினிமா கொட்டகைகள் முழுமையாக அழிக்கப்பட்டு தற்காலத்தில் புதிய தோற்றத்தில் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இக்காட்சிப்படுத்தலானது தற்காலத்தவர்களால் பார்க்கப்பட வேண்டியதொன்றாக அமைகின்றது. காரணம் மறைக்கப்பட்டு வருகின்ற பல்வேறான பண்பாட்டுத் தடயங்களை அறிந்து கொள்வதற்கும், யாழ்ப்பாணத்தின் 16 வருட காலத்திற்கு முற்பட்டதான போக்குகள் மற்றும் அதன் நிலை, தன்மை போன்ற விடயங்களினை தெளிவுற விளக்குவதாக அமைந்துள்ளது. குறிப்பாக 16 வருடத்திற்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தின் நிலையைக் கண்டறிந்த பார்வையாளர்கள் அதனை மீளவும் பார்க்கின்ற போது அவரிற்கான பழைய அனுபவங்களினை ஞாபகப்படுத்துவதாக அமைகின்றது. அதுமட்டுமன்றி புதிய நகரத்தினை மாத்திரம் பார்வையிடுகின்றவர்களிற்கு இக்காட்சிப்படுத்தல் புதுமையானதோர் அனுபவத்தினை வழங்குகின்றது. அதாவது 16 வருடத்திற்கு முற்பட்டதான வண்ணார்ப்பண்ணை சிவன் கோயிலை மையமாக் கொண்டு விரிவடைந்த வரலாற்றினதும் பண்பாட்டினதும் குறி காட்டிகள் தற்சமயம் வேறுபட்டிருக்கின்ற தன்மையுடையதாக உள்ளதனை பார்க்க முடிகின்றது.

இதன் பின்னணியில் தெரு என்பது வெறுமனே இடங்களை இணைக்கும் பாதைகள் அல்ல தேவைகள் கருதி அமைக்கப்படும் கட்டுமானங்கள் அல்ல. அது வரலாற்றினதும் பண்பாட்டினதும் குறிக் காட்டியாகும். ஒரு வகையில் பௌதீக நிலைப்படுத்தப்பட்ட கருத்தாடல் சமூக வரலாறுகளின் பிரதிநிதித்துவமாகும். அந்த வகையில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை மையமாகக் கொண்டு விரிவடைந்த வரலாற்றினதும் பண்பாட்டினதும் குறி காட்டிகளில் ஏற்பட்ட மாற்றம் அழிவடைந்துள்ள தன்மை என்பவற்றை இந்த ஒளிப்படக் காட்சியானது வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. காலங்களின் சாட்சியமாகவும், தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு நிலைமைகள் மற்றும் நிலை மாற்றங்களின் மீதான வாசிப்புக்களுக்கான தடயமாகவும் இந்தக்காட்சியை முன்மொழிகிறது.

(நன்றி காண்பியக் காட்சி கே.கே.எஸ். வீதி அன்றும் இன்றும் வண்ணார்பண்ணை அத்தியாயம் கையேடு)





# ரேவதியாக மாறிய ரம்யா பாண்டியன்

கார்த்திக் மற்றும் ரேவதி நடித்த 'கிழக்கு வாசல்' என்ற திரைப்படம் கடந்த 1990 ஆம் ஆண்டு வெளியானதுடன், இந்த படத்தில் இடம்பெற்ற இளையராஜாவின் இசையில் உருவான 'பச்சைமலை பூவு' என்ற பாடல் 35 ஆண்டுகள் ஆன பின்னரும், மக்களின் மனதைக் கவர்ந்து வருகின்றது.

இந்த நிலையில், நடிகை ரம்யா பாண்டியன், இந்த பாடலுக்குத் தோன்றும் வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். இந்த பதிவில், இந்த பாடலும், ரேவதி மற்றும் கார்த்திக் ஆகியோரும், இந்த வீடியோவுக்கு தூண்டுதலாக இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 'இந்த பாடலை நான் எப்போதும் நேசித்து வருவேன். காரணமே இல்லாமல், இந்த பாட்டை கேட்கும் போதெல்லாம் என் உள்ளத்தில் நெகிழ வைக்கும் ஒரு அமைதியான உணர்வு ஏற்படும். இந்த அழகான கனவுகளை உயிர்ப்பிக்க உதவிய எனது குழுவினருக்கு மனமார்ந்த நன்றி,' என்று பதிவு செய்துள்ளார்.

இந்த பதிவுக்கு, அச்சு அசல் ரேவதி மாதிரியே இருக்கிறீர்கள்' என்று ரசிகர்கள் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.



# டூரிஸ்ட் ஃபேமிலி

சசிகுமார் நடிப்பில் கடைசியாக வெளிவந்த நந்தன் திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து டூரிஸ்ட் ஃபேமிலி என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

அறிமுக இயக்குநர் அபிஷான் ஜீவின்ந்த் இயக்கியுள்ள இந்த திரைப்படத்தில் சசிகுமார், சிம்ரன், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ், யோகி பாபு, ரமேஷ் திலக், எம்.எஸ்.பாஸ்கர், பக்ஸ் என்ற பகவதி பெருமாள் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

மே முதலாம் திகதி திரைப்படம் வெளியாக உள்ள நிலையில், படத்தின் டிரெய்லர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

திரைப்படத்தின் எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், படத்திற்குத் தணிக்கை குழு யு சான்றிதழை வழங்கியுள்ளது.

ஷான் ரோல்டன் இசையமைக்கிறார். கலை இயக்கத்தை ராஜ் கமல் கவனிக்க, படத்தொகுப்புப் பணிகளை பரத் விக்ரமன் மேற்கொள்கிறார். பாடலாசிரியர் மோகன் ராஜன் பாடல்களை எழுத, ஆடை வடிவமைப்பு பணிகளை நவா ராஜ்குமார் கையாள்கிறார்.

# அடுத்தது அஜித் படம்




விஜய் நடித்த 'சச்சின்' திரைப்படம் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ரீ-ரிலீஸ் ஆன நிலையில் படத்தின் வெற்றியைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொண்ட 'கலைப்புலி' எஸ்.தாணு, 2005 ஆம் ஆண்டு 200 திரையரங்குகளில் வெளியான 'சச்சின்' படம் தற்போது 355 திரையரங்குகளில் ரிலீஸ் ஆகியிருக்கிறது என்று கூறியுள்ளார்.

இந்தியா மட்டுமின்றி, அமெரிக்கா, இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலும் 'சச்சின்' திரைப்படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாகவும், 'சச்சின்' வெளியாகும் போது கிடைத்த இலாபத்தை விட தற்போது பத்து மடங்கு இலாபம் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 'சச்சின்' படத்தை அடுத்து அஜித் நடிப்பில் உருவான 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தை ரீ-ரிலீஸ் செய்யப் போவதாகவும், படத்தின் இயக்குநரிடம் அது குறித்து பேசியதுடன், அதற்கான வேலைகள் நடந்து வருகிறது என்று தெரிவித்தார்.

அதற்கடுத்ததாக சூர்யா நடித்த 'காக்க காக்க' திரைப்படத்தை ரீ-ரிலீஸ் பணியைத் தொடங்க உள்ளதுடன், 2026 ஆம் ஆண்டு 'தெறி' மற்றும் 'கபாலி' ஆகிய படங்களை ரீ-ரிலீஸ் செய்யும் திட்டமும் உள்ளது என்று எஸ்.தாணு குறிப்பிட்டுள்ளார்.

# சிக்ஸ்பேக் சர்ச்சை



சூர்யா நடித்த 'ரெட்ரோ' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் சிவகுமார், "தமிழ் சினிமாவில் முதல் முறையாக சிக்ஸ்பேக் வைத்தது எனது மகன் சூர்யா தான்" என்று தெரிவித்தார்.


இதனைத் தொடர்ந்து, நடிகர் விஷால் அளித்த பேட்டியில், "எனக்குத் தெரிந்த அளவுக்கு முதல் முறையாக சிக்ஸ் பேக் வைத்தவர் தனுஷ் தான். 'பொல்லாதவன்' படத்திற்காக அவர் சிக்ஸ் பேக் வைத்தார். அதன் பிறகு தான் நான் சிக்ஸ் பேக் வைத்தேன்" என்று கூறினார்.

இதன் மூலம், சூர்யா முதலில் சிக்ஸ் பேக் வைக்கவில்லை என்பதை அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டதாகப் பலரும் கருத்து வெளியிட்டனர்.

இந்த நிலையில் நடிகை உமா ரியாஸ்கான் "சூர்யாவும் இல்லை, தனுஷும் இல்லை, எனது கணவர் தான் முதலில் சிக்ஸ் பேக் வைத்தவர்" என்பதை மறைமுகமாகக் கூறும் நோக்கில், சமூக வலைத்தளத்தில் ரியாஸ் கான் சிக்ஸ் பேக் வைத்த புகைப்படத்தைப் பதிவு செய்துள்ளார்.

சுந்தர் சி இயக்கத்தில் உருவான 'வின்னர்' திரைப்படத்தில், ரியாஸ் கான் சிக்ஸ் பேக் உடலமைப்புடன் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதா கொங்கராவின் அடுத்த படத்தில் சிம்பு?



இயக்குநர் சுதா கொங்கரா தற்போது சிவகார்த்திகேயன் நடித்து வரும் 'பராசக்தி' படத்தை இயக்கி வரும் நிலையில், அவரது அடுத்த படத்தில் நடிகர் சிம்பு நடிக்க உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த படம் 'பராசக்தி' படத்துக்கு முன்பே திட்டமிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

'வேட்டை நாய்' என்ற தலைப்பில் வெளியான நாவல் தான் திரைப்படமாக உருவாக இருக்கிறது என்றும் இதற்கான ஆரம்பகட்ட பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.

சிம்பு ஏற்கெனவே மூன்று படங்களில் நடிக்க கமிட்டாகி இருக்கும் நிலையில், இந்த படம் எப்போது தொடங்கும், எப்போது அறிவிப்பு வெளியாகும் என்ற தகவல் இல்லை.

ஆனாலும், சிம்பு – சுதா கொங்கரா இணையும் படம் நிச்சயம் உருவாகும் என திரை உலகில் பேசப்பட்டு வருகின்றது.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சம்பியனாகிய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில் லிவர்பூல் சம்பியனாகியது.

தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலமே இன்னும் நான்கு போட்டிகள் மீதமிருக்கையிலேயே சம்பியனாவதை லிவர்பூல் உறுதி செய்தது.

லிவர்பூல் சார்பாக லூயிஸ் டியஸ், அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், கோடி கக்போ, மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமினிக் சொலங்கே பெற்றிருந்தார்.

தற்போது 34 போட்டிகளில் 82 புள்ளிகளை லிவர்பூல் பெற்றுள்ள நிலையில், இரண்டாமிடத்திலுள்ள ஆர்சனல் 67 புள்ளிகளையே பெற்றுள்ளது.

இதேவேளை போர்ண்மெத்தின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.



## ஐ.பி.எல்:

# டெல்லியை வென்றது பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் ஞாயிற்றுக்கிழமை(27) நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூரு

டெல்லி: 162/8 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 41 (39), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 34 (18), அபிஷேக் பொரேல் 28 (11), விப்ராஜ் நிகம் 12 (06) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 3/33 [4], ஜொஷ் ஹேசில்வூட் 2/36 [4], குருனால் பாண்டியா 1/28 [4], சுயாஷ் ஷர்மா 0/22 [4])

பெங்களூரு: 165/4 (18.3 ஓவ.)

(துடுப்பாட்டம்: குருனால் பாண்டியா ஆ.இ 73 (47), விராட் கோலி 51 (47), டிம் டேவிட் ஆ.இ 19 (05), ஜேக்கப் பெத்தெல் 12 (06) ஓட்டங்கள்.

பெத்தெல் 12 (06) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 2/19 [4], துஷ்மந்த சமீர 1/24 [3], குல்தீப் யாதவ் 0/28 [4])


போட்டியின் நாயகன்: குருனால் பாண்டியா.

மும்பையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை மும்பை இந்தியன்ஸ் வென்றது.

இந்நிலையில் டெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸை கப்பிட்டல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# றோமாவிடம் தோற்றது நடப்புச் சம்பியன்கள்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற றோமாவுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் தோற்றது.

இதேவேளை தமது மைதானத்தில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற லெக்கேயுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 74 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 71 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டரும், 65 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 62 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன.

இந்தியா/பாகிஸ்தான்

## எல்லையோர விவசாயிகளுக்கு

# காலக்கெடு

பஞ்சாபில் இந்தியா-பாகிஸ்தான் எல்லையோர விவசாயிகள் 48 மணி நேரத்துக்குள் அறுவடை செய்ய வேண்டும் என்று, எல்லை பாதுகாப்புப் படையான பிஎஸ்எஃப், திங்கட்கிழமை (28) அறிவுறுத்தியுள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் மோதல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, இங்குப் பாதுகாப்பை அதிகரிக்க பிஎஸ்எஃப் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.



அறுவடைக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

530 கிலோமீற்றர் நீளமுள்ள சர்வதேச எல்லையில் 45,000 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக அமிர்தசரஸ், டர்ன் தரன், ஃபெரோஸ்பூர் மற்றும் பைசலாபாத் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு அறுவடையை முடிக்கும்படி குருத்வாராக்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோதுமை அறுவடையில் 80% க்கும் அதிகமானவை நிறைவடைந்திருந்தாலும், குறிப்பிட்ட நேரத்திற்குள் அறுவடை செய்து, பின்னர் தீவனமாகப் பயன்படுத்த வைக்கோலைச் சேகரிப்பது மிகவும் சவாலானது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.



## பஹல்காம் தாக்குதல்:

# பாகிஸ்தானுக்கு சீனா ஆதரவு

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சருடன் சீனா வெளியுறவு அமைச்சர் வாங் யி பேசியுள்ளார்.

தொலைபேசி வாயிலாக இந்த உரையாடல் நடைபெற்றுள்ளது. அப்போது, "பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் விவகாரத்தில், பாரபட்சமற்ற விசாரணைக்கு சீனா ஆதரவு அளிக்கும்" என்றும் கூறியுள்ளார்.

மேலும், "இந்த விவகாரத்தில் இருதரப்புமே பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்.

பாகிஸ்தானின் உறுதியான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குச் சீனா தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது.

இந்த மோதல் இந்தியாவிற்கோ அல்லது பாகிஸ்தானிற்கோ அடிப்படை நலன்களுக்கு உகந்ததல்ல, தெற்காசியாவின் ஸ்திரத்தன்மைக்கும் நன்மை பயக்கக் கூடியது அல்ல" என்றும் வாங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## பஹல்காம் தாக்குதல்:

# இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவுக்கு ஆதரவாக உலக நாடுகள் பலவும் பாகிஸ்தானுக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அதன்படி அமெரிக்க தேசிய புலனாய்வுத்துறை இயக்குனரும், இந்திய வம்சாவளியுமான காஷ் படேலும் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

பஹல்காம் தாக்குதலில் பலியானவர்களுக்கு அமெரிக்க தேசிய புலனாய்வுத்துறை இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவியையும் வழங்க தயாராக இருப்பதாகவும், மேலும் பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுத்த பதிலடிக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் எக்ஸ் தளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தாலி

## போப் பிரான்சிஸ் கல்லறையை

# மக்கள் பார்வையிட அனுமதி

ரோம் புனித மேரி பேராலயத்தில் உள்ள போப் பிரான்சிஸ் கல்லறையைப் பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை(27) அனுமதி வழங்கப்பட்டது.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதன்படி ரோம் மட்டுமின்றி, இத்தாலி முழுவதிலும் இருந்து ஏராளமானோர் போப் ஆண்டவர் கல்லறையைப் பார்வையிட்டு வருகிறார்கள்.

குறிப்பாக அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்த முடியாத பலரும், கல்லறையைப் பார்வையிடச் சென்று வருகின்றனர்.இதைப்போல வெளிநாடுகளில் இருந்து சென்று வாடிகனில் தங்கியிருக்கும் பலரும் போப் கல்லறையில் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தி வருகின்றனர்.



ரோஜா பூக்களைக் கல்லறையில் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதனால் புனித மேரி பசிலிக்கா பேராலயம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. பலரும் கண்ணீருடன் போப் ஆண்டவரின் நினைவுகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

இந்தியா

## பாகிஸ்தான் 'யூடியூப் சேனல்கள்'

# இந்தியாவில் முடக்கம்


பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக, உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரைகளுக்குப் பிறகு, பாகிஸ்தானின் பல யூடியூப் சேனல்களை இந்திய அரசு இப்போது தடை செய்துள்ளது.

இதனுடன் பயங்கரவாதிகளை(Terrorists) தீவிரவாதிகள் (Militants) என்று குறிப்பிட்டதற்காக பிபிசி இடம் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அலைவரிசைகள் மீதான தடை குறித்து உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"இந்தியாவிற்கு எதிராக எரிச்சலூட்டும், வகுப்புவாத கருத்துக்கள் மற்றும் தவறான தகவல்களைப் பரப்பியதற்காக பாகிஸ்தானிய யூடியூப் சேனல்கள் தடுக்கப்பட்டுள்ளன.



"பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட 16 யூடியூப் சேனல்களில் (முன்னலா கிரிக்கெட் வீரர்) சோயிப் அக்தரின் சேனல் மற்றும் அங்குள்ள பல முக்கிய ஊடக நிறுவனங்களின் யூடியூப் சேனல்களும் அடங்கும். டான் நியூஸ், சாமா டிவி, ஏஆர்ஒய் நியூஸ், போல் நியூஸ், ரஃப்தார் டிவி, தி பாகிஸ்தான் ரெஃபரன்ஸ், ஜியோ நியூஸ், சாமா ஸ்போர்ட்ஸ் மற்றும் உசைர் கிரிக்கெட் ஆகியவை முடக்கப்பட்டன" என்று தெரிவித்தார்

முடக்கப்பட்ட 16 பாகிஸ்தான் யூடியூப் சேனல்களில் ஒட்டுமொத்தமாக 63.08 மில்லியன் (6.3 கோடிக்கும்) மேலான folwers உள்ளமை குறிப்பிடத்தக்கது.


காஷ்மீர்

# பதுங்கு குழிகளை வெட்டும் காஷ்மீர் மக்கள்

காஷ்மீர் எல்லையோர கிராமங்களில் வசிக்கும் மக்கள், தங்கள் பகுதியில் நிலத்தடி பதுங்கு குழிகளைத் தயார் செய்து வருகின்றனர்.

இது ஏற்கெனவே இப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மையை நினைவூட்டுவதாக உள்ளது. 'மோடி பதுங்கு குழிகள்' என பிரபலமாக அறியப்படும் இவற்றில் போர்வைகள் மற்றும் படுக்கைகள் போன்ற அத்தியாவசிய பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

எல்லைக்கு அப்பால் இருந்து (பாகிஸ்தான்) நடத்தப்படும் தாக்குதலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க, எல்லை கட்டுப்பாட்டுக்கோடு அருகே நிலத்தடியில் பதுங்கு குழிகள் கட்டப்பட்டுள்ளன. இவை "மோடி பதுங்கு குழிகள்" என அழைக்கப்படுகின்றன.



பூஞ்ச் மற்றும் ரஜவுரி உள்ளிட்ட அதிக ஆபத்து உள்ள பகுதிகளில் தனிநபர் மற்றும் சமூக பதுங்கு குழிகளைக் கட்ட நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை மத்திய அரசு வழங்கியது. பிரதமர் நரேந்திர மோடியின் 2ஆவது ஆட்சியின் போது இத்தகைய பதுங்கு குழிகள் அதிக அளவில் கட்டப்பட்டன. ஜம்மு பிராந்தியத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு சுமார் 8,000 பதுங்கு குழிகள் கட்டப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முதல் கட்டமாக ஜம்மு, கதுவா, சம்பா, பூஞ்ச் மற்றும் ரஜவுரி ஆகிய 5 மாவட்டங்களில் 14,460 பதுங்கு குழிகளைக் கட்ட மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. பின்னர் ஆபத்து அதிகம் உள்ள அனைத்து பகுதிகளிலும் பதுங்கு குழிகளைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 29, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.